பண்பாட்டலுவல்கள் திணைக்கள சுற்றுநிருபம் : **2020/04**

எனது இல : NP/03/09/CMA/16
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
01.01.2020.

சம்பந்தப்பட்டவர்களுக்கு,

## வடமாகாண அமைச்சுக்கள், அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களில் பணிபுரியும் அரச உத்தியோகத்தர்களுக்கு இடையிலான ஆக்கத்திறன் போட்டிகள் - 2020

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வடக்கு மாகாண அரச உத்தியோகத்தர்களிடையே மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர்வதற்காக அலுவலர்களுக்கு சந்தர்ப்பத்தினை வழங்கும் முகமாக இப் போட்டிகள் நடத்தப்படும். இப் போட்டிகள் யாவும் தமிழ், சிங்கள மொழிகளில் நடத்தப்படும்.

பொது நிபந்தனைகள் :-

1. வடமாகாண அமைச்சுக்கள், அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களில் அரச சேவையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மட்டுமே இப் போட்டிகளில் பங்குபற்ற முடியும்.
2. தேசிய பாடசாலை ஆசிரியர்களோ, மத்திய அமைச்சின் கீழ் பணிபுரியும் அரச உத்தியோகத்தர்களோ இப் போட்டியில் பங்குபற்ற முடியாது.
3. ஒரு போட்டியாளர் மூன்று போட்டிகளுக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.
4. ஒவ்வொரு போட்டிக்கும் விண்ணப்பதாரர் தனித்தனி விண்ணப்பங்களைத் சமர்ப்பிக்க வேண்டும்.
5. விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து நிறுவனத் தலைவரின் சிபார்சுடன் அனுப்பி வைத்தல் வேண்டும். நிறுவனத் தலைவர் சிபார்சு இன்றி அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
6. அனைத்து ஆக்கங்களும் சுய ஆக்கங்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் மொழிபெயர்ப்பாகவோ அல்லது தழுவலாகவோ இருத்தல் ஆகாது.
7. ஆக்கம் அரசியல் கலப்பற்றதாக இருக்கவேண்டும்.
8. நடுவர்களின் தீர்ப்பே இறுதிமுடிவாகும்.
9. வெளிப்பாட்டுத்திறன் போட்டிகளில் பங்கு கொள்பவர்கள் ஒப்பனை, போக்குவரத்துச் செலவினங்களை தாங்களே பொறுப்பேற்க வேண்டும்.
10. போட்டிகள் தொடர்பில் எதுவித போக்குவரத்துக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட மாட்டாது.
11. தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்களும் திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
12. பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் கடமையாற்றுபவர்கள் இப்போட்டிகளில் பங்குகொள்ள முடியாது.
13. முதல் மூன்று வெற்றிநிலைகளைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு வடமாகாண பண்பாட்டுப் பெருவிழாவில் பரிசளிப்பு நடைபெறும்.
14. கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் போட்டியாளருக்கான போட்டி தொடர்பான விளக்கங்கள் பயிற்சிபட்டறையின் மூலம் வழங்கப்படும்.

போட்டி நிபந்தனைகள்

- கவிதையாக்கம்

  போட்டி நடைபெறும் போது வழங்கப்படும் தலைப்பில் குறித்த நேரத்தினுள் எழுதுதல் வேண்டும்.

- பாடலாக்கம்

  வழங்கப்படும் காலத்தில் வழங்கப்படும் தலைப்பில் ஆக்கப்படுதல் வேண்டும்.

  3½ நிமிடங்களுக்கு உட்பட்டதாக பாடல் இருப்பதுடன் இசைநயத்துடன் கூடிய ஒரு ஒழுங்கினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

- குறுநாடகவாக்கம்

  அரசியல் கலப்பற்றதாக இருப்பதுடன் கொடுக்கப்படும் தலைப்பில் ஆக்கப்படுதல் வேண்டும். தாளின் ஒருபக்கம் மட்டுமே எழுதப்படுவதுடன் பின்பக்கத்தில் போட்டியாளர் மேடைக்குறிப்புகளையும் காட்சிகள் தொடர்பான வரைபினையும் அமைக்க முடியும்.

- சிறுகதையாக்கம்

  கொடுக்கப்படும் நேரத்திற்குள் கொடுக்கப்படும் தலைப்பில் அரசியல் கலப்பற்றதாக அமைதல் வேண்டும்.

- தனிநடிப்பு

  5 நிமிடங்கள் கொண்டதாக நடிப்பு அமைய வேண்டும். பின்னணி இசை அவசியமற்றது. பொருத்தமான ஒப்பனைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

- ஓவியம்

  பயிற்சிப் பட்டறையில் வழங்கப்படும் தலைப்பு, அறிவுறுத்தல்களுக்கமைய கொடுக்கப்படும் நேரத்திற்குள் வரையப்பட வேண்டும். அதற்குரிய தாள்கள் வழங்கப்படும். ஏனைய பொருட்களை போட்டியாளர் கொண்டுவருதல் வேண்டும்.

- வாய்ப்பாட்டு

  3 - 5 நிமிடங்களுக்கு உட்பட்டதாக பாடல் இருப்பதுடன் இசைநயத்துடன் கூடிய ஒழுங்கினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
  (கர்நாடக சங்கீதம், கிராமியப் பாடல்கள், உள்ளூர் கலைஞர்களின் பாடல்களை இசைவடிவில் பாடுதல் வேண்டும்)

- **திருக்குறள் கட்டுரைப் போட்டி**

  திருக்குறள் கட்டுரை போட்டிக்குரிய தலைப்பு பயிற்சிப்பட்டறையின் போது வழங்கப்படும் அதிகாரங்களுக்கிடையில் நடாத்தப்படும். கட்டுரை 500 சொற்களுக்கு குறையாமல் எழுதப்படல் வேண்டும்.

  பரிசில்கள் விபரம்

  1ம் இடம் - ரூ.5,000.00

  2ஆம் இடம் - ரூ.3,000.00

  3ஆம் இடம் - ரூ.2,000.00

மேற்படி போட்டிகளுக்குரிய விண்ணப்பங்களை 31.03.2020 ஆம் திகதிக்கு முன்னர் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு கிடைக்க கூடியவாறு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உரிய திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்ப படிவத்தினை பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் அல்லது தங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தரிடம் அல்லது வட மாகாண மற்றும் கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி : உதவிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

இணையத்தள முகவரி : www.np.gov.lk / www.edumin.np.gov.lk

தொலைபேசி இல. : 0212054105 / 0213202568

இ.இளங்கோவன்
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்த
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வடமாகாணம்

இ.இளங்கோவன்,
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.
வடக்கு மாகாணம்.